[29th January 1972

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, காங்ரீட் கலவை இயந்திரங்கள் இல்லாமலே எவ்வாறு காங்ரீட் கலக்கும் பணி நடைபெறுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது வாரியத்தின் வேலையை மேற்கொள்கிற காண்ட்ராக்டர்கள் தங்களிடம் உள்ள சொந்தக் கலவை இயந்திரங்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு முன்பு இவற்றை வாங்கலாம் என்ற யோசனையில் அதற்காக டெண்டர்கள் விடப்பட்டன. அவையும் வந்து சேர்ந்தன. இதற்கிடையில் காண்ட்ராக்டர்களே தாங்கள் வைத்துப் பயன்படுத்தும்போது அரசும் அதை வாங்குவதால் செலவுதானே அதிகமாகும் என்று கருதப்படுகிறது.

Manhandling of Manager and Cashier

*52 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Manager and Cashier of the Employees' State Insurance Office in Singanallur in Coimbatore District were manhandled about 23rd June, 1971; and

(b) if so, the details thereof?

மேலாளர், காசாளர் மீது தாக்குதல்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி அலுவலக மேலாளரும், காசாளரும் 1971, ஜூன் 23 ஆம் நாள் அளவில் தாக்கப்பட்டனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 23—6—1971 அன்று பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டமொன்று சிங்காநல்லூர் தொழிலாளர் நலக் காப்புறுதி அலுவலகத்தின் முன்னால் கூடியது. அக்கூட்டத்திலிருந்த தொழிலாளர்கள் தாங்கள் அளித்த மருத்துவச் சான்றிதழ்களின் அடிப்படையில் தங்களுக்கு உடனடியாகப் பணம் கொடுக்கப்படவேண்டுமென்று கோரினார்கள். நிதி வசதியின்மை காரணமாகவும், சான்றிதழ்கள் சரிபார்க்கப்படாமல் உள்ள நிலையிலும் தாங்கள் உடனடியாகப் பணம் கொடுக்கவியலாதென்று அலுவலக மேலாளரும் காசாளரும் தெரிவித்தார்கள். தொழிலாளர்கள் 10 பேர் வலுக்கட்டாயமாக அலுவலகத்துக்குள் நுழைந்து மேலாளரையும் காசாளரையும் தாக்கினார்கள். அந்தப் பத்துத் தொழிலாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஏழு பேர் கைது செய்யப்பட்டார்கள். மூன்று பேர் நீதிமன்றத்தில் சரணடைந்தார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களனைவரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு தங்கள் மீது கருணை காட்ட வேண்டுமென்று இறைஞ்சினார்கள். கோயம்புத்தூர் மாவட்ட மாஜிஸ்திரேட் அவர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளித்து, நன்னடத்தைக்கான உறுதி மொழிப் பத்திரங்கள் எழுதிக்கொடுத்ததன் பேரில் அவர்களை விடுதலை செய்தார்.